4th February 1966]

புலவர் கா. கோவிந்தன்: இந்த ரூ. 25,000-ல் இப்பொழுது சர்க்கார் 50 சத விகிதம் கொடுக்கிறது. அதை 75 சத விகிதமாகக் கொடுப்பதற்கு அரசாங்கத்தில் யோசனை இருப்பதாகத் தெரிகிறது. அது எந்த நேரத்தில் அமலுக்கு வரும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்குத் தெரிந்தவரையில் அவ்வாறு யோசனை ஒன்றும் இல்லை.

திரு. ம. கமலநாதன்: புதியதாக உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை துவக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி இன்னும் முடிவு செய்ய வில்லை.

Schools for the Blind, Deaf and Dumb

* 87 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any grants are given to the school for the Deaf and Dumb and the school for the Blind in Palayamcottai;

(*b*) whether any representations were made by the Schools' managements in this regard; and

(*c*) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes, to the Director of Secondary Education.

(*c*) The Director has passed suitable orders on the representation.

திரு எம். எஸ். செல்வராஜன்: செவிடு, ஊமை, குருடு போன்ற குழந்தைப் பள்ளிக்கூடங்களுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த மானேஜ்மெண்டின் நிதி நிலைமை என்ன? எத்தனை ஆசிரியர்கள் அந்தப் பள்ளியில் இருக்கிறார்கள்? எத்தனை மாணவர்கள் அந்தப் பள்ளியில் இருக்கிறார்கள்? என்கிற கணக்குகளை எல்லாம் பார்த்து ஓரளவு நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளி

* 88 **கேள்வி.—திரு எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், வானூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளியில், பாண்டிச்சேரி இலாகாவைச் சேர்ந்த கிராமப் பகுதி மாணவர்கள் மேற்படி பள்ளியில் சென்ற இரண்டு ஆண்டு காலமாக மாதச் சம்பளம் கட்டிக்கொண்டு படிக்கிறார்கள் என்பது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Tuition fees were collected for one year.

[4th February 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ப்ரீ எஜுகேஷன் என்று சொல்லப்படுகிற இந்த நாளில் அடுத்த ராஜ்யத்தில் இருந்து வருகிற மாணவர்களிடத்தில் மட்டும் ஏன் சம்பளம் வாங்கவேண்டும் என்று கேட்டதற்கு தெரியாமல் செய்துவிட்டோம் என்று அங்கே சமாதானம் சொல்கிறார்கள். இப்படித் தெரியாமல் செய்தவர்கள் இலாகாவினரா ? அல்லது, அங்கே உள்ள மானேஜ்மென்டாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தெரியாமல் செய்வது யாருக்கும் சகஜம். அதுவும் இது தமிழ் நாட்டில் உள்ள பள்ளி. புதுச்சேரி வேறு ராஜ்யம். தமிழ் நாட்டிற்கு அப்பாற்பட்டது. தமிழ் நாட்டில்தானே இலவசக் கல்வி இருக்கிறது, அங்கே இருந்து வருகிறவர்களிடம் சம்பளம் வாங்கவேண்டும் போல் இருக்கிறது என்று ஓராண்டு வசூலித்துவிட்டார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு அது வந்தவுடன், அவர்களிடம் இருந்தும் வசூலிக்கவேண்டாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மேலும் ஓராண்டு வசூலித்த பணத்தையும் திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கும்பகோணம் கலைக் கல்லூரி

*89 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கும்பகோணத்திலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்குமான அரசினர் கலைக் கல்லூரியை விரிவு படுத்தும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is laid on the table of the House.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டக் கல்லூரிகளில் போஸ்ட் க்ராஜுவேட் கோர்சு என்பதே கிடையாது. ஆகவே, கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியிலாவது அந்த வகுப்பை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குக் கட்டடம் கட்டியாக வேண்டும். போதிய கட்டடங்கள் கட்டியான பிறகுதான் அந்த வகுப்பைத் துவங்க பல்கலைக்கழகத்தார் அனுமதி அளிப்பார்கள்.

திரு. ம. கமலநாதன் : புதிதாகத் துவக்கப்படுகிற கலைக் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக்கொள்வதில்லை என்று சொல்கிறார்களே, இது பல்கலைக்கழக உத்தரவா ? அரசாங்க உத்தரவா ? பெண்களையும் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல்கலைக்கழக விதிப்படி போதிய கட்டட வசதிகள் முதலில் செய்தாக வேண்டும். அதற்கு நிதி வேண்டும். கனம் உறுப்பினர் மனதில் கொண்டுள்ள கல்லூரிக்கு மக்கள் கொடுக்கவேண்டிய நிதியைக்கூட இன்னும் பூராவாக கொடுக்கவில்லை.

---

a Printed as Appendix II on pages 670–671.